தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## இன்றைய வேளாண் செய்திகள்

15.09.2012 A.M

15th Sep 20012

### 12வது ஐந்தாண்டு திட்டத்தில் வேளாண்துறைக்கு 4 சதவீதம் வளர்ச்சி இலக்கு: மான்டேக் சிங்



புதுடில்லி : சில்லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீடு குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குடன் சந்தித்து பேசிய திட்டக்குழு துணை தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா பின்னர் செய்தியாளர்களிடம் பேசியதாவது, நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து பிரதமருடன் தான் விவாதித்தாகவும், அதில் 12 வது ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்கனவே பொருளாதார வளர்ச்சிக்காக நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டை 9 சதவீத்தில் இருந்து 8.2 சதவீதமாக குறைக்க முடிவு செய்யப்பட்டதாகவும், 12வது ஐந்தாண்டு திட்டத்தில் வேளாண்துறை வளர்ச்சி இலக்கு 4 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டு இருப்பதாகவும், இந்த திட்டகாலத்தில் பல்வேறு துறைகளில் சுமார் ரூ.55 லட்சம் கோடி வரை முதலீடு செய்ய இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

15.09.2012 A.M

| 15th Sep 20012 | திருமூர்த்தி அணை : பாசனத்துக்கு நாளை முதல் தண்ணீர் திறப்பு |
|---|---|

சென்னை, செப்., 14 : திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையில் இருந்து பாசனத்துக்காக நாளை முதல் இடைவெளி விட்டு தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று, திருமூர்த்தி அணையில் இருந்து, பரம்பிக்குளம் பிரதான கால்வய், உடுமலைப்பேட்ட் கால்வாய், உயர்மட்ட கால்வாய், மற்றும் தளிவாய்க்கால் பாசன அமைப்பின் கீழ் உள்ள விவசாய நிலங்களின் பாசனத்துக்காக நாளை முதல் தேவைக்கேற்ப இடைவெளி விட்டு தண்ணீர் திறந்துவிட தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இதனால் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 96,987 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

| 15th Sep 20012 | கபினி அணை நீர் மேட்டூர் வந்தது |
|---|---|

மேட்டூர், செப். 14: கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர் ஆகிய அணைகளிலிருந்து திறக்கப்பட்ட நீர் மேட்டூர் அணைக்கு வெள்ளிக்கிழமை இரவு வந்து சேரத் தொடங்கியது.

தமிழகத்துக்கு கர்நாடகம் இந்த மாதம் 12-ம் தேதி முதல் 20-ம் தேதி வரை விநாடிக்கு 10 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன்படி செப்டம்பர் 12-ம் தேதி கபினியிலிருந்து விநாடிக்கு 9,664 கன அடி தண்ணீரும், கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து விநாடிக்கு 2,327 கன அடி தண்ணீரும் திறக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு மாலை நான்கு மணிக்கு விநாடிக்கு 9,300 கன அடியாகவும், இரவு எட்டு மணிக்கு விநாடிக்கு 9,605 கன அடியாகவும் அதிகரித்தது. கர்நாடக அணைகளிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர்தான் மேட்டூர்

அணைக்கு வரத் தொடங்கியுள்ளது என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் சனிக்கிழமை காலை நிலவரத்திற்கு பிறகே முழு விவரம் தெரிவிக்க இயலும் என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## 15th Sep 20012 | கால்நடை கணக்கெடுப்பு இன்று தொடக்கம்

சென்னை, செப். 14: ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கால்நடைகள் கணக்கெடுப்பு சனிக்கிழமை (செப். 15) முதல் அக்டோபர் 15 வரை நடைபெற உள்ளது.
இது குறித்து தமிழக அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்தி:
5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கால்நடை கணக்கெடுப்பு சனிக்கிழமை (செப். 15) முதல் அக்டோபர் 15 வரை நடைபெறவுள்ளது. தமிழகம் முழுவதும் சுமார் 2 கோடி குடியிருப்புகளில் நடைபெறும் இந்தப் பணியில் 14,384 பேர் ஈடுபடவுள்ளனர். இதற்காக தமிழகத்துக்கு மத்திய அரசு ரூ. 10 கோடி ஒதுக்கியுள்ளது. அரசின் கொள்கைகளை வகுக்கவும், விவசாயிகளுக்கான திட்டங்களைத் தீட்டவும் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இந்தக் கணக்கெடுப்பில் பசு, எருமை, ஆடு, வெள்ளாடு, பன்றி, குதிரை, கழுதை, நாய், முயல், யானை, கோழி, காடை, வாத்து, வான்கோழி, ஈமு கோழி ஆகியவற்றின் விவரங்கள் சேகரிக்கப்படும்.

இது தவிர, கால்நடைத் தொழிலில் பயன்படுத்தப்படும் தானியங்கி பால் கறவை இயந்திரம், தானியங்கி தீவனம் வெட்டும் கருவி, தானியங்கி பயிர் வெட்டும் கருவி, தானியங்கி சாண சேகரிப்பு மற்றும் அப்புறப்படுத்தும் கருவி போன்ற உபகரணங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்களும் சேகரிக்கப்படும் என்று செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

15.09.2012 A.M

15th Sep 20012

## மொடக்குறிச்சியில் ரூ. 1 கோடிக்கு கொப்பரை ஏலம்

மொடக்குறிச்சி, : அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டத்தில் நேற்று கொப்பரை ஏலம் நடந்தது.

அதில், கொப்பரை தேங்காய் ஏலத்திற்கு 5,700 மூட்டைகள் விற்பனைக்கு வந்ததில் , குவின்டால் ஒன்றுக்கு முதல் தரத்தில் ரூ. 3765 முதல் ரூ. 4040 வரையும், இரண்டாம் தரத்தில் குவின்டாலுக்கு ரூ. 3460 முதல் ரூ. 3900 வரையும் விலை போனது. ஏலக்கூடத்தில் மொத்தம் ரூ 1 கோடியே 15 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது.

15th Sep 20012

## பருவமழை குறைவால் தேயிலை மகசூல் பாதிப்பு

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழை பொய்த்து போனதால் இம்மாவட் டத்தில் விவசா யம் முழுமையாக பாதித்துள்ளது. மேலும் நீராதாரங்களும் வற்ற துவங்கியதால் குடிநீர் பற்றாகுறையும் தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. கடந்த 10 நாட்களுக்கு மேலாக கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதிகளில் மட்டும் கனமழை பெய்து வருகிறது. ஆனால் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கொலக்கொம்பை உள்ளிட்ட பகுதிகளில் லேசான மழையே பெய்து வருகிறது. இதன்காரணமாக காய்கறி விவசாயிகள் புதிய பயிர்களை சாகுபடி செய்ய முடியாமல் அவதியுற்றுள்ளனர். மேலும் தேயிலை விவசாயத்துக்கும் மழை போதாது என்பதால் அதன் மகசூலும் தொடர்ந்து குறைந்து வருகிறது. சீதோஷ்ணநிலை அவ்வப்போது மாறி வருதால் பொதுமக்களுக்கும் பல்வேறு சர்ம நோய்கள் ஏற்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழை வரும் மாதங்களில் பெய்தால் மட்டுமே விவசாயத்தை நம்பியுள்ள விவசாயிகள் பயன்பெற இயலும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

15th Sep 20012

## விற்பனை நிலையங்களில் நிர்ணயித்த விலையில் உரம் விற்கப்படுகிறதா வேளாண் இணை இயக்குனர் திடீர் ஆய்வு

தஞ்சை, : தஞ்சை வட்டார விற்பனை நிலையங்களில் அரசு நிர்ணயித்த விலையில் உரம் விற்கப்படுகிறதா என்று வேளாண் இணை இயக்குனர் முகமது யாகியா நேற்று ஆய்வு செய்தார். டெல்டா மாவட்டங்களுக்காக சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. விவசாயிகளுக்கு ரசாயன உரம் கிடைப்பதில், எவ்வித இடர்பாடும் ஏற்படக் கூடாது என்பதில் வேளாண்துறை தீவிரமாக கண்காணித்து வருகிறது. தஞ்சை மாவட்டத்திற்கு தேவையான யூரியா, டிஏபி, பொட்டாஷ் மற்றும் இதர காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் விநியோகம் செய்வதை அனைத்து வட்டாரங்களிலும் வேளாண் அலுவலர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதனிடையே தஞ்சை வட்டாரத்தில் உள்ள உர விற்பனை நிலையங்களில் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் முகமது யாகியா தலைமையிலான அதிகாரிகள் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இதில் உர இருப்பு பதிவேடு, பில் புத்தகம், அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களின் உரங்கள் மட்டும் விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் நிறுவனங்களில் இருந்து பெறப்பட்டு இருப்பு வைக்கப்பட்டுள்ள உரங்களுக்கு உரிய கணக்கு உள்ளதா, மூட்டைகளின் மேல் குறிப்பிட்டுள்ள விலைக்குட்பட்டு உரங்கள் பில் போட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறதா என்று ஆய்வு செய்யப்பட்டன.

உர இருப்பு பதிவேட் டின் படி உள்ள இருப்பும், குடோன்களில் உள்ள இருப்பும் சரியாக உள்ளதா என கணக்கிடப்பட்டு சிப்பம் வாரியாக எண்ணி சரிபார்க்கப்பட்டது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குனர் முகமது யாகியா கூறுகையில், நடப்பு சம்பா பருவத்தில் உர விநியோகத்தில் எவ்வித இடர்பாடும் இன்றி இருப்பை உறுதி செய்ய, ஒவ்வொரு வட்டாரங்களிலும் உரக் கண்காணிப்பு குழு அமைத்து உர விநியோகம் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது என்றார்.

ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குனர் மணிமாறன் (உரக்கட்டுப்பாடு), உதவி இயக்குனர் நெடுஞ்செழியன், வேளாண்மை அலுவலர்கள் பிரபாகர், சுஜாதா ஆகியோர் ஆய்வில் ஈடுபட்டனர்.

15th Sep 20012

## விவசாயிகளுக்கு மண்புழு உரஉற்பத்தி தொழில் நுட்பம் குறித்து விளக்கம்

புதுச்சேரி, : புதுவை வேளாண்துறை மத்திய அரசின் உதவியுடன் வேளாண் விரிவாக்க சீரமைப்பு திட்டமான ஆத்மா என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் தகவல்கள், விவசாய கல்வி சுற்றுலா, வேளாண் ஆராய்ச்சி, விவசாயிகள் சந்திப்பு, கலந்தாய்வு கூட்டம் வழங்கப்பட்டு வருகிறது. ஆத்மா திட்டத் தின் கீழ் சேலியமேடு மற்றும் சூரமங்கலம் கிராமத்தில் இயற்கை வேளாண்மை மற்றும் மண் புழு உர உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றி ஆராய்ச்சியாளர்கள், விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. கூடுதல் வேளாண் இயக்குனர் ரவிப்பிரகாசம் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். துணை வேளாண் இயக்குனர் தனசேகரன் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அங்கக சான்றளிப்பு ஆய்வாளர் சத்தியமூர்த்தி பேசுகையில், இயற்கை வேளாண்மையில் ஊட்டச்சத்து மேலாண்மை, பலதானிய பயிர் விதைத்து 45 நாளில் மண்ணில் மடக்கி உழவேண்டும். இயற்கை வேளாண்மையில் பசுசாணம் மற்றும் கோமியம் பற்றி விளக்கினார். மேலும் தாவரச்சாறு கொண்டு பூச்சிவிரட்டி தயாரித்தல், இயற்கை வேளாண்மையில் களைகளை கட்டுப்படுத்த ஊடுபயிர் மற்றும் அசோலா பற்றியும், விளையும் பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்து விளக்கினார். மண்புழு உர உற்பத்தி தொழிற்நுட்பங்கள் குறித்து கணேஷ் விளக்கினார். உற்பத்தி தொட்டி அமைத்தல் மற்றும் உற்பத்தி தொழிற்நுட்பங்கள் குறித்தும் செயல்விளக்கம் அளித்தார். நிகழ்ச்சியில் திட்ட பயனாளிகளுக்கு 100 சதவீத மானியத்தில் சில்பாலின் மண்புழு உர உற்பத்தி தொட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வேளாண் துறை அதிகாரிகள், களப்பணியாளர்கள் மற்றும் வேளாண் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண் டனர்.

15th Sep 20012

## குறுவை சாகுபடி பாதிப்பு விவசாயிகளுக்கு?ஏக்கருக்கு ரூ.10?ஆயிரம்?வழங்க?வேண்டும் கம்பம் எம்எல்ஏ கோரிக்கை

கூடலூர், : குறுவை சாகுபடி செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட 5 மாவட்ட விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம்  நிவாரணம் வழங்க வேண்டும் என கம்பம் எம்எல்ஏ ராமகிருஷ்ணன் எம்எல்ஏ கோரிக்கை விடுத்துள்ளார்.

பெரியாறு அணையிலிருந்து விவசாயத்திற்கு உரிய தண்ணீர் கிடைக்காததால் தேனி, மதுரை, திண்டுக்கல் உட்பட மாவட்டங்களிலும் குறுவை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நிலை குறித்து கம்பம் ராமகிருஷ்ணன் எம்எல்ஏ, மாவட்ட கலெக்டர் பழனிச்சாமிக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

முல்லைப் பெரியாறு அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு தேவையான தண்ணீர், உரிய காலத்தில் கிடைக்காததால் தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களிலும் விவசாயம் பாதிக்கப்பட்டு நெல் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் விவசாயிகளும், தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் சம்பா சாகுபடி செய்யவுள்ள விவசாயிகளுக்கு, முன்பு பெற்றிருந்த விவசாயக் கடனை ரத்து செய்ய வேண்டும். சாகுபடி செய்ய வசதியாக வட்டியில்லா கடன் வழங்க வேண்டும்.

பூச்சி மருந்து, விதை நெல், களைக்கொல்லி மருந்து, உரம் உட்பட அனைத்து செலவு தொகையையும் விவசாயிகளுக்கு மானியமாக வழங்க வேண்டும். காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி மும்முறை மின்சார இணைப்பு வழங்கியதுபோல், பாதிக்கப்பட்டுள்ள 5 மாவட்ட விவசாயிகளுக்கும் மும்முறை மின்சாரம் வழங்க வேண்டும். குறுவை சாகுபடி செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ள 5 மாவட்ட விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்.

கால்நடை வளர்ப்பவர்களுக்கு மானிய விலையில் தீவனம் வழங்க வேண்டும்' இவ்வாறு அவர் மனுவில் தெரிவித்துள்ளார்.

| 15th Sep 20012 | பருவ மழை பொய்த்ததால் கருணைக்கிழங்கு விளைச்சல் பாதிப்பு |
|---|---|

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை அருகே எறையூர், எல்லைகிராமம், கூவாடு, புகைப்பட்டி, கூத்தனூர், பாளை யம், வடகுரும்பூர், நெய்வனை உள் ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் 300 ஏக்கரில் கருணைக்கிழங்கு பயிர் செய்துள்ளனர். 6 மாத பயி ரான கருணைக்கிழங்கை கடந்த மார்ச் மாதத்தில் பயிரிட்டிருந்த விவசாயிகள் தற்போது அறுவடை செய்வ தில் இறங்கியுள்ளனர். இங்கு அறுவடையாகும் கருணைக்கிழங்குகள் மதுரை, திருச்சி, சேலம், சென்னை கோயம்பேடு பகுதிகளுக்கு நேரடியாக எடுத்து சென்று விற்பனை செய்து வழக்கம். கடந்த காலங்களில் ஒரு சென்ட் பரப்பில் 3 மூட்டை வரை கருணைக்கிழங்குகள் கிடைத்தது. இப்போது பருவ மழை பெய்யாமல் போன தால் கருணைக்கிழங்கு விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மேலும் கருணைக்கிழங்கு போதிய ஈரப்பதம் இல்லாததால் பெரிய அளவில் கிடைக்காமல் சிறிய அளவிலேயே விளைந்துள்ளதாக

விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். கிழங் கின் எடையும் வழக்கத்தை விட குறைந்து உள்ளதால் இந்த பருவத்தில் கருணைக்கிழங்கு பயிரிட்டுள்ள விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்திக்க உள்ளோம் என்று கவலையுடன் கூறுகின்றனர். எனவே கருணைக்கிழங்கு பயிரிட்டிருந்த விவசாயிகளுக்கு போதிய இழப்பீடு தொகைகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும் என உளுந்தூர்பேட்டை பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

15th Sep 20012

## சுய உதவி குழுக்களுக்கு மண்புழு தயாரிப்பு பயிற்சி வேளாண் அதிகாரி தகவல்

திருத்துறைப்பூண்டி, : திருத்துறைப்பூண்டி அடுத்த ஆலத்தம்பாடி கிராமத்தில் முதல்வரின் சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் நேரடி நெல் விதைப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. வேளாண் உதவி இயக்குனர் நடேசன் வரவேற்றார். வேளாண் இணை இயக்குனர் மயில்வாகணன், ஒன்றியக்குழு தலைவர் வேதநா யகி சிங்காரவேலு, நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி, கவுன்சிலர் சண்முகசுந்தர் முன்னிலை வகித்தனர்.
கலெக்டர் நடராஜன் பேசுகையில், ‘திருவாரூர் மாவட்டம் விவசாயம் சார்ந்த மாவட்டமாகும். சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடாத நிலையில் விவசாயிகள் அனைவரும் நேரடி நெல் விதைப்பு செய்து சாகுபடி பணியை மேற்கொள்ள வேண்டும். முன்னோடி திட்டமாக திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை வட்டாரத்தில் 2 சுய உதவிக்குழுக்களுக்கு ஆகாயத்தாமரையை பயன்படுத்தி மண்புழு உரம் தயாரிப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. செயற்கை முறை நிலத்தடி நீர் செறிவூட்டுதல் பரவலாக அனைத்து கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றார்.
விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கி அமைச் சர் காமராஜ் பேசுகையில், ‘கடந்த ஆண்டு 25 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்தோம். இந்த முறை இந்த இலக்கை தாண்டி உற்பத்தி செய்ய வேண்டும். விவசாயிகள் அனைவரும் அனைத்து திட்டங்களைப் பற்றி தெரிந்துகொண்டு பயனடையவேண்டும் என்றார்.
முன்னதாக கரும்பியூர் கிராமத்தில் ஒரு விவசாயி வயலில் இயந்திர முறையில் நேரடி நெல் விதைப்பு செயல் விளக்கத்தை பார்வையிட்டனர். ஊராட்சி தலைவர் பாண்டியன், வேளாண் அலுவலர் தெய்வேந்திரன், துணை வேளாண் அலுவலர் சங்கர், வேளாண் உதவி அலுவலர்கள் மகேஷ், சாமிநாதன், ஜோதிகணேசன், மணியன், ரமேஷ்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஆலத்தம்பாடி ஊராட்சி தலைவர் சசிகலா திருப்பதி நன்றி கூறினார்.

15th Sep 20012

## பெரியகுளம் அருகே விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

தேவதானப்பட்டி, : பெரியகுளம் அருகே உள்ள ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது.

பெரியகுளம் அருகே வரதராஜ் நகரில் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு சர்க்கரை ஆலையின் ஆராய்ச்சிதுறை தலைவர் ஜெயராமன் தலைமை வகித்தார். பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் பொன்னுச்சாமி பயிற்சியினை துவக்கி வைத்து பேசினார்.

விரிவாக்க துறை தலைவர் வெற்றிவேல் பயிற்சி அளித்தார். பயிற்சியில் சொட்டுநீர் பாசன முறைகள், பூச்சி, நோய் கட்டுப்பாடு, செம்மை கரும்பு சாகுபடி, சாகுபடியில் இயந்திரங்களின் பயன்பாடு, கரும்பில் மறுதாம்பு பயிர், நுண்ணுயிர் உரங்களின் பயன்கள், புதிய ரகங்களின் மகசூல், கரும்பு வயல்வெளி பயிற்சி போன்ற பயிற்சிகள் நடைபெறுகின்றன.

இதில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

15th Sep 20012

## சிறப்பு கிராம சபை கூட்டம்

காட்டுமன்னார்கோவில் .காட்டுமன்னார்கோவில் அருகே பூவிழந்தநல்லூரில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடந்தது. ஊராட்சி தலைவர் திரிபுரசுந்தரி தலைமை தாங்கினார். சிறப்பு அலுவலராக சுனாமி அலகு உதவி செயற்பொறியாளர் குமுதா கலந்துகொண்டார்.

கிராமங்களில் உள்ள சிறு குறு விவசாயிகளின் பெயர் பட்டியல்களை கிராம சபை கூட்டத்தில் வைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த பகுதியில் உள்ள சிறு குறு விவசாயிகள் ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆகியோரின் நிலங்களில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களை கொண்டு பணிகள் செய்வது பற்றி விவாதிக்கப்பட்டது. இதில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜோதி, லோகநாதன், ஊராட்சி உதவியாளர் திருமாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதே போன்று கீழகடம்பூரில் கிராம சபை கூட்டம் ஊராட்சி தலைவர் ஜோதி பாலமணிகண்டன் தலைமையில் நடந்தது. இதில் துணை தலைவர் சேகர்,

உறுப்பினர் அமுதா சாந்தி, ஊர்நல அலுவலர் கண்ணாயிரம், ஊராட்சி செயலாளர் பழனிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

15th Sep 20012

## குறுவை சாகுபடி பாதிப்பு கிராமப்புற வேலை உறுதி அட்டை அனைவருக்கும் வழங்க வேண்டும்

புவனகிரி, : குறுவை சாகுபடி பாதிப்பால் கிராமப்புற மக்கள் அவதிப்பட்டு வருவதால், கிராமப்புற வேலை உறுதி திட்டத்தில் விண்ணப்பித்த அனைவருக்கும் அடையாள அட்டை வழங்க வேண்டும் என ஊராட்சி தலைவர்கள் கூட்டமைப்பு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கீரப்பாளையம் ஒன்றிய ஊராட்சி மன்றத் தலைவர்கள் கூட்டமைப்பு கூட்டம் கீரப்பாளையத்தில் நடந்தது. கூட்டமைப்பின் தலைவர் கலியமலை செந்தில்குமார் தலைமை தாங்கினார். செயலாளர் பரதூர் ஜவஹர் வரவேற்றார். வைத்தியநாதசாமி, முத்துகிருஷ்ணன், லிங்கேஸ்வரி, நாகலிங்கம், வெங்கடகிரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

டெல்டா பாசன பகுதியாக உள்ள கீரப்பாளையம் ஒன்றியத்தில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டு உள்ளதால் கிராமப்புற மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். அதனால் கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் வேலை செய்ய விண்ணப்பித்த அனைவருக்கும் அடையாள அட்டை உடனடியாக வழங்கிட வேண்டும்.

அடிக்கடி வட்டார வளர்ச்சி அலுவலர்களை பணியிடம் மாற்றுவதால் கிராம வளர்ச்சி திட்டங்களில் தேக்க நிலை உள்ளது. எனவே அடிக்கடி வட்டார வளர்ச்சி அலுவலர்களை இடம் மாற்றுவதை கண்டித்தல், ஊராட்சிகளில் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்களை விளக்கி ஊராட்சி தலைவர்கள் கூட்டமைப்பு செயலாளர் ஜவஹர் பேசினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

15.09.2012 A.M

| 15th Sep 20012 | டெல்டா பாசனத்துக்காக<br>மேட்டூர் அணை இன்று திற பு<br>400 மெகாவாட் மின் உற்பத்தி ம் தொடங்குகிறது |
|---|---|

மேட்டூர், செ .17–

டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணை இன்று திறக்க படுகிறது. த ணீர் திறக்க படுவதால் ர்மி ன்நிலையங்கள் மூலம் 400 மெகாவாட் மின் உற்பத்தி ம் தொடங்குகிறது.

மேட்டூர் அணை

மேட்டூர் அணையில் இருந்து ஒவ்வொரு ஆ டும் ஜூன் 12–ந் தேதி காவிரி டெல்டா பாசனத்துக்காக த ணீர் திறந்து விட படும். இந்த பாசனத்தின் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு, திருச்சி, கரூர் உள்பட 11 மாவட்டங்களில் உள்ள சுமார் 16 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

கடந்த ஆ டு குறித்த நாளுக்கு முன்னதாகவே ஜூன் 6–ந் தேதி காலை 10 மணிக்கு டெல்டா பாசனத்துக்கு த ணீர் திறந்து விட பட்டது. அ போது அணையின் ர்மட்டம் 116 அடியாக இருந்தது. ஆனால், இந்த ஆ டு தென்மேற்கு பருவ மழை பொய்த்து போனதாலும், காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால தீர் பின்படி கர்நாடகம் தமிழகத்துக்கு அளிக்க வே டிய த ணீரை கொடுக்காததாலும் மேட்டூர் அணைக்கு ர்வரத்து குறைந்தது. இதன்காரணமாக குறித்த நேரத்தில் டெல்டா பாசனத்துக்கு த ணீர் திறக்க முடியவில்லை.

சம்பா சாகுபடிக்காக...

இதன்காரணமாக டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பாதிக்க பட்டது. எனவே, சம்பா சாகுபடிக்காவது மேட்டூர் அணையில் இருந்து த ணீர் திறக்க வே டும் என்று டெல்டா விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். விவசாயிகளின் கோரிக்கையை பரிசீலித்த முதல்–அமைச்சர் ஜெயலலிதா, சம்பா சாகுபடிக்காக செ டம்பர் மாதம் 17–ந் தேதி (இன்று) மேட்டூர் அணையில் இருந்து த ணீர் திறக்க படும் என்று உத்தரவிட்டார்.

இதற்கிடையே மேட்டூர் அணைக்கு ர்வரத்து குறைந்ததால், தமிழக அரசு கடந்த மாதம் சு ரீம் கோர்ட்டை அணுகி நாள் ஒன்றுக்கு 2 டி.எம்.சி. த ணீரை கர்நாடகம் தமிழகத்திற்கு அளிக்க வழிவகை செய்ய வே டும் என்று மனு தாக்கல் செய்தது.

சு ரீம் கோர்ட்டு உத்தரவு

இந்த மனுவை விசாரித்த சு ரீம் கோர்ட்டு, இம்மாதம் 12–ந் தேதி முதல் 20–ந் தேதி முடிய வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி வீதம் கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு த ணீர் திறந்து விடவே டும் என்றும், இரு மாநில எல்லை பகுதியான பிலிகு டுலுவில் உள்ள ர் அளவிடும் கருவியில் ர்வரத்து அளவிடும்போது வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக இருக்க வே டும் என்றும் உத்தரவிட்டது.

இதன்காரணமாக கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு த ணீர் திறக்க பட்டது. இதனால் கடந்த 5 தினங்களாக மேட்டூர் அணைக்கு ர்வரத்து படி படியாக அதிகரித்து வந்தது. இதனால் அணையின் ர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

அணை இன்று திற பு

இந்த நிலையில் முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் உத்தரவுபடி, இன்று (திங்கட்கிழமை) மதியம் 12 மணிக்கு டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையில் இருந்து த ணீர் திறந்து விட படுகிறது. இந்த நிகழ்ச்சியில் பொது பணித்துறை அமைச்சர் ராமலிங்கம், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் இடை பாடி பழனிசாமி, தொழில்துறை அமைச்சர் தங்கமணி ஆகியோர் கலந்து கொ டு பாசனத்துக்காக த ணீரை திறந்து விடுகின்றனர்.

முன்னதாக அணையின் மேல்மட்ட மதகு வழியாக வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி வீதம் திறந்து விட படும் த ணீர், சிறிது நேரத்துக்கு பின் ர்மின்நிலையங்கள் வழியாக வெளியேற்ற படும். இவ்வாறு திறக்க படும் த ணீர் பாசனத்தின் தேவைக்கேற்ப படி படியாக அதிகரிக்க படும்.

ர்மட்டம் 83 அடி

கடந்த 2002–ம் ஆ டு செ டம்பர் 6–ந் தேதி டெல்டா பாசனத்துக்கு த ணீர் திறக்க பட்டது. இதையடுத்து 10 ஆ டுகளுக்கு பிறகு இன்று மீ டும் செ டம்பர் மாதம் த ணீர் திறக்க படுவது குறி பிடத்தக்கது. மேட்டூர் அணை திறக்க படுவதால் டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

நேற்று மாலை நிலவர படி மேட்டூர் அணையின் ர்மட்டம் 83.56 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 11,287 கனஅடி வீதம் த ணீர் வந்தது. அணையில் இருந்து குடி ர் தேவைக்காக வினாடிக்கு 2005 கனஅடி வீதம் திறந்து விட படுகிறது.

400 மெகாவாட் மின்உற்பத்தி

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு திறக்க படும் த ணீர் ர் மின்நிலையங்கள் வழியாக செல்லும்போது, மின் உற்பத்தி செய்ய படும். அதாவது, அணை மின்நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும், சுரங்க மின்நிலையம் மூலம் 200 மெகாவாட் மின்சாரமும், காவிரி ஆற்றின் குறுக்கே கட்ட பட்டு உள்ள கீழ் கதவணை மின் திட்டங்கள் மூலம் 150 மெகாவாட் மின்சாரமும் என மொத்தம் 400 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய படும்.

எனவே, மேட்டூர் அணையில் இருந்து இன்று த ணீர் திறக்க படுவதால் ர்மின்நிலையங்களில் மின் உற்பத்தி ம் தொடங்குகிறது. இரு பினும், அணை மற்றும் சுரங்க மின்நிலையங்கள் வழியாக திறந்து விட படும் த ணீரின் அளவை பொறுத்து மின்உற்பத்தி திறனும் மாறுபடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

| 15th Sep 20012 | உர விற்பனை நிலையங்களில்<br>வேளா  மைத்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு |
|---|---|

தஞ்சாவூர்,செ .17 –

உர விற்பனை நிலையங்களில் வேளா  மைத்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்
கொ  டனர்.

ஆய்வு

டெல்டா மாவட்டங்களுக்காக தமிழகஅரசு அறிவித்துள்ள சம்பா சாகுபடி சிற பு தொகு பு திட்டம் விவசாயிகளிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தி  ள்ளது. சம்பா சாகுபடியில் அதிக மகசூல் பெற ரசாயன உரங்கள் இடுவது அவசியம். ரசாயன உரங்கள் கிடை  பதில் எந்தவித இடர்பாடும் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடாது என்பதில் வேளா  மைத்துறை தீவிரமாக க  காணித்து வருகிறது. தஞ்சை மாவட்டத்திற்கு தேவையான யூரியா, டி.ஏ.பி, பொட்டாஷ் மற்றும் இதர காம்  ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளா  மை
கூட்டுறவு கடன் சங்கங்கள்
மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் விநியோகம் செய்வது வேளா  மைத்துறை அதிகாரிகளால் க
காணிக்க  பட்டு வருகிறது.

தஞ்சை வட்டாரத்தில் உள்ள உர விற்பனை நிலையங்களில் மாவட்ட வேளா  மை இணை இயக்குநர் முகமதுயாகியா தலைமையில் அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொ  டனர். இதில் உரம் இரு பு பதிவேடு, பில் புத்தகம், அனுமதி அளிக்க  பட்ட நிறுவனங்களின் உரங்கள் மட்டும் விற்பனை செய்ய படுகிறதா என ஆய்வு மேற்கொள்ள பட்டது. மூட்டைகளின் மேல் குறி பிட்டுள்ள விலைக்கு உட்பட்டு உரங்கள் பில்போட்டு விவசாயிகளுக்கு வழங்க படுகிறதா? என்பது குறித்தும் ஆய்வு செய்ய பட்டது.

க  காணி புக்குழு

உர இரு பு பதிவேட்டின்படி உள்ள இரு பும் குடோன்களில் உள்ள இரு பும் சரியாக உள்ளதா? என்பதும் கணக்
கிட  பட்டு சி  பம் வாரியாக எ  ணி பார்க்க  பட்டது. நட  பு சம்பா பருவத்தில் உர விநியோகத்தில் எந்தவித இடர்பாடும் இல்லாமல் இரு  பதை உறுதி செய்ய மேலும் ஒவ்வொரு வட்டாரங்களிலும் உர க  காணி பு குழு அமைத்து உர விநியோகத்தை தீவிரமாக க  காணிக்க வேளா  மை இணை இயக்குநர் முகமது யாகியா உத்தரவு பிற பித்துள்ளார்.

இந்த ஆய்வின்போது வேளா  மை உதவி இயக்குநர்(தரக்கட்டு  பாடு) மணி
மாறன், தஞ்சை வேளா  மை உதவி இயக்குநர் நெடுஞ்
செழியன், வேளா  மை
அலுவலர்(தரக்கட்டு  பாடு) பிரபாகர், வேளா  மை
அலுவலர் சுஜாதா ஆகியோர் உடன் இருந்தனர்.